# REGIONAL TAMIL NEWS - TIRUCHIRAPPALLI

18.03.2018 - 13.45

தலைப்புச் செய்திகள்

1. தூய்மை இந்தியா திட்டம் நாட்டின் 80 சதவிகித பகுதிகளை சென்றடைந்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. இணையதள சேவைகளுக்கு ஆதார் அட்டைகளை கூடுதல் கவனத்துடன் பயன்படுத்துமாறு இந்திய தனிநபர் அடையாள ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

3. காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு, தமிழக அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாக மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

4. கொழும்பில் நிடாஸ் முத்தரப்பு ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷ்-ஐ எதிர்கொள்கிறது.

இனிவிரிவான செய்திகள்

******

யுகாதி - வாழ்த்து

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் யுகாதி, சைத்ர சுக்லதி, குடிபடாவா உள்ளிட்ட புத்தாண்டு கொண்டாட்டங்களையொட்டி, குடியரசுத்தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த், குடியரசுத் துணைத்தலைவர் திரு.வெங்கய்ய நாயுடு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இத்தகைய பண்டிகைகள், நல்லிணக்கத்தை மேலும் வலுப்படுத்துவதுடன், நம் கலாச்சார பன்முக சிறப்பை பிரதிபலிப்பதாக குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த புத்தாண்டு வளம் மற்றும் மகிழ்ச்சியை அனைவருக்கும் வழங்கட்டும் என குடியரசு துணைத்தலைவர் வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த புத்தாண்டு மக்களுக்கு அற்புதங்களை வழங்கும் ஆண்டாக இருக்க வேண்டும் என கூறியுள்ளார்.

முன்னதாக, யுகாதி தொடர்பான நிகழ்ச்சியில் காணொலி மூலம் பங்கேற்ற பிரதமர், தூய்மை இந்தியா திட்டம் நாட்டின் 80 சதவிகித பகுதிகளுக்கும் சென்றடைந்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கை முறைகள் சுலபமாக்குவதும், அனைவருக்கும் வளர்ச்சியின் பலன்கள் கிடைப்பதை உறுதி செய்வதும் அரசின் குறிக்கோள்களாகும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

பெண்களின் நலனுக்காக உஜ்வாலா திட்டம் நடைமுறைபடுத்தியதோடு தேசிய சத்துணவு திட்டமும் செயல்படுத்தி வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

இந்நாளையொட்டி ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித், முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி, திமுக செயல்தலைவர் திரு.மு.க.ஸ்டாலின், பாமக நிறுவனர் தலைவர் டாக்டர்.எஸ்.ராமதாஸ் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடிபடாவா புத்தாண்டு கொண்டாடும் ஆளுநருக்கு முதலமைச்சர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி, வளம் மற்றும் வளர்ச்சியை வழங்கட்டும் என வாழ்த்தியுள்ளார்.

தமிழக - கர்நாடக - ஆந்திர எல்லையிலுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உகாதி பண்டிகை பாரம்பரிய உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

******

ராம்நாத் கோவிந்த்

அறிவியல், சட்டம், தத்துவம் போன்ற பல துறைகளிலும் பழமை வாய்ந்த சமஸ்கிருத மொழி நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருவதாக குடியரசுத்தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் தெரிவித்துள்ளார்.

பூரியில் தேசிய சமஸ்கிருத சம்மேளனத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களை இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், ஆதி சங்கரர் காலத்திலிருந்தே தேசிய ஒற்றுமையின் அடையாளமாக சமஸ்கிருதம் மொழி விளங்கியதை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக, பூரி ஜெகந்நாதர் கோவிலில் தரிசனம் செய்த குடியரசுத்தலைவர், கோவில் திருவிழாவை நினைவு கூறும் வகையில் ஆயிரம் மற்றும் பத்து ரூபாய் நாணயங்களை வெளியிட்டார்.

குடியரசுத்தலைவர் இன்றுமாலை புவனேஷ்வர் ஐ.ஐ.டி. பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதோடு, இந்திய எண்ணெய் கழகத்தின் ரசாயன கல்வி கழகத்தையும் தொடங்கி வைக்கிறார்.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் திறன் மேம்பாட்டு நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவிலும் குடியரசுத்தலைவர் பங்கேற்கிறார்.

******

குடியரசுத்தலைவர் மாநாடு

இளம் தொழில்முனைவோர் மாநாடு புதுதில்லியில் நாளை தொடங்குகிறது.

இந்த ஐந்து நாள் மாநாட்டை துவக்கி வைக்கும் குடியரசுத்தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த், இளம் தொழில் முனைவோருக்கு சிருஷ்டி விருதுகளை வழங்குகிறார்.

ஊரக மேம்பாடு, தூய்மை, சுகாதாரம், உயிரி தொழில்நுட்பம், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புதிய தொழில் நுட்பங்கள் இம்மாநாட்டில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

******

மன்மோகன்சிங்

வேளாண் பெருமக்களின் வருவாய் 2022 ஆம் ஆண்டிற்குள் இரட்டிப்பாக்கப்படும் என்ற மத்திய அரசின் அறிவிப்பை நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகக்குறைவாக உள்ளதாக முன்னாள் பிரதமர் டாக்டர்.மன்மோகன் சிங் குறை கூறியுள்ளார்.

புதுதில்லியில் காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் குழு கூட்டத்தில் பேசிய அவர், பாதுகாப்பு துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானது அல்ல என்றும் குறை கூறினார்.

******

ஆதார்

இணையதளம் மூலமான சேவைகளைப் பெற, ஆதார் அட்டையை பயன்படுத்தும் போது பொதுமக்கள் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும் என இந்திய தனிநபர் அடையாள ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஆதார் எண் தொடர்பான அனைத்து தகவல்களும் மிகப்பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதாக ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஆதார் மூலம் தனிநபர் ரகசியங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதுடன், பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக தகவல்கள் வெளியானதையடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

******

எஸ்.பி.சுக்லா

பொதுத்துறை வங்கிகளின் நிதிநிலையை பாதுகாப்பாக பராமரிப்பதற்கு ரிசர்வ் வங்கி 11 அம்ச செயல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

வங்கிகளின் நிதிநிலையை கருத்தில் கொண்டு பாதுகாப்பாக கடன் வழங்குவதற்கு இது வழிவகை செய்யும் என்று மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.எஸ்.பி.சுக்லா தெரிவித்துள்ளார்.

கான்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொதுத்துறை வங்கிகள் பொதுமக்களுக்கு அளிக்கும் சேவைகளை புதிய செயல்திட்டம் எவ்விதத்திலும் பாதிக்காது என்றும் தெளிவுபடுத்தினார்.

******

மன்-கி-பாத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி, அகில இந்திய வானொலியில் மன்-கி-பாத் - மனதின் குரல் நிகழ்ச்சியில் வரும் 25ஆம் தேதி உரையாற்றுகிறார்.

இதுவரை நீர்சேமிப்பு, காதி ஆடைகளின் பயன்பாடு, போதைப்பொருள் தடுப்பு, தூய்மை இந்தியா, உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து, தமது கருத்துக்களையும், எண்ணங்களையும் இந்நிகழ்ச்சி மூலம் பிரதமர் வெளிப்படுத்தியுள்ளார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை **mygov.in** என்ற இணையதளத்திலோ அல்லது 18001-17800 என்ற கட்டணமில்லா தொலைபேசியிலோ பதிவுசெய்யலாம்.

******

ஆர்.பி.உதயகுமார்

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு மத்திய அரசுக்கு தமிழக அரசு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாக மாநில வருவாய்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

முன்னதாக மதுரை அம்மா திடலில் வரும் 30 ஆம் தேதி நடைபெற உள்ள இலவச திருமண முன்னேற்பாடு பணிகளை அவர் பார்வையிட்டார்.

******

ஜல்லிக்கட்டு

மதுரை அருள்மிகு ஊர்க்காவலன் சுவாமி உற்சவத்தை முன்னிட்டு, பழங்காநத்தம் மந்தை திடலில் ஜல்லிக்கட்டு போட்டியை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ இன்று தொடங்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வீரராகவராவ் முன்னிலையில் நடைபெறும் இப்போட்டியில் 800க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றுள்ளன.

காளைகளை அடக்க 400க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் களமிறங்கி வருகின்றனர்.

18 ஆண்டுகளுக்கு பிறகு இப்பகுதியில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

******

பேரிடர் மேலாண்மை மாநாடு

இந்தியா - ஜப்பான் இடையேயான முதலாவது பேரிடர் மேலாண்மை மற்றும் அபாயம் குறைப்பு தொடர்பான பயிற்சி பட்டறை புதுதில்லியில் நாளை தொடங்குகிறது.

நிலநடுக்கம் உள்ளிட்ட பேரிடர்களால் அதிகம் பாதிக்கப்படும் இடங்களில் நவீன கட்டுமானம், பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்ட பல்வேறு விசயங்கள் இதில் விவாதிக்கப்படும்.

******

ஜல்லிக்கட்டு

தேனி மாவட்டம் வல்லவராயன்பட்டியில் உள்ள அருள்மிகு வல்லடிக்கார சுவாமி கோவில் திருவிழாவை ஒட்டி இன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.பல்லவி பல்தேவ் தொடங்கி வைத்தார்.

விதிமுறைகளின் படி ஜல்லிக்கட்டு நடைபெறுவதை டி.ஐ.ஜி. திரு.ஜோஷி நிர்மல்குமார் பார்வையிட்டார்.

******

சரக்கு ரயில்

எர்ணாகுளத்திலிருந்து - ஆந்திர மாநிலம் கம்பம் சென்று கொண்டிருந்த சரக்கு ரயில் அரக்கோணத்தையடுத்த மேலப்பாக்கம் ரயில் நிலையத்தில் இன்று தடம் புரண்டதையடுத்து, அரக்கோணம் வழியாக இயக்கப்படும் லால்பாக் உள்ளிட்ட பல்வேறு அதிவிரைவு ரயில்கள் 2 மணி நேரம் தாமதமாக செல்கின்றன.

*****

அன்புமணி ராமதாஸ்

காவிரி பாசன மாவட்டங்களில் மத்திய அரசு கொண்டு வர உள்ள கெயில் குழாய் பாதை திட்டத்தை எக்காரணத்தை முன்னிட்டும் தமிழக அரசு அனுமதிக்க கூடாது என்று பாமக இளைஞரணித் தலைவர் டாக்டர்.அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் காவிரி பாசன மாவட்டங்கள் பாலைவனங்களாக மாறிவிடும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

******

பல்கலைகழகம்

இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைகழகம் IGNOU-யின் அனைத்து பாடப் பிரிவுகளிலும் ஆதிதிராவிட, பழங்குடியினர் மற்றும் திருநங்கைகளுக்கு கட்டணமின்றி சேர்க்கை அனுமதிக்கப்பட்டு வருவதாக அதன் மதுரை மண்டல இயக்குநர் முனைவர் எம்.சண்முகம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பத்து மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிக்காதவர்களுக்கு பல்கலைகழகத்தில் ஆறு மாத இடைக்கால பாடத்திட்டம் மூலம் பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றார்.

******

தர்மபுரி - வாய்ஸ்

தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி பேசுகையில்,

.... ஆட்சித்தலைவர் வாய்ஸ் ......

******

ராஜலெட்சுமி

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் - காந்திமதி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழா குறித்த ஆலோசனைக் கூட்டம் மாநில ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.ராஜலெட்சுமி தலைமையில் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அடுத்த மாதம் 27 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ள நிலையில், ஐந்து கோடிரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் 135 திருப்பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

******

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொழில் தொடங்க ஒற்றை சாளர முறையில் விரைவில் அனுமதி வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கணேஷ் தெரிவித்துள்ளார்.

தொழில் முனைவோர் அரசின் அனுமதியை விரைவாக பெற ஏதுவாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*****

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு நேற்று மாலை முதல் 2 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அணைக்கு வினாடிக்கு 35 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

அணையின் நீர்மட்டம் இன்று 40.11 அடியாக உள்ளது.

இதனிடையே, முல்லைப்பெரியாறு அணைக்கு வரும் நீரின் அளவு 389 கனஅடி அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 113.6 அடியாக உயர்ந்துள்ளது.

******

கிரிக்கெட்

கொழும்பில் நடைபெறும் நிடாஸ் முத்தரப்பு ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்றிரவு 7 மணிக்கு இந்தியா - பங்களாதேஷ்-ஐ எதிர்கொள்கிறது.

இரு அணிகளுக்கும் இடையே இதுவரை நடைபெற்ற 8 ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டிகளில் 7 போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு பிரேமதாசா விளையாட்டரங்கில் 11 முறை விளையாடியதில் 9 முறை இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

******

மகளிர் கிரிக்கெட்

வதோதராவில் நடைபெறும் 3-வது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியாவிற்கு எதிராக 333 ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் இந்தியா சற்றுமுன் 13 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 101 ரன் எடுத்திருந்தது.

முதலில் விளையாடிய ஆஸ்திரேலியா 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 332 ரன் எடுத்தது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை ஆஸ்திரேலியா 2 - 0 என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றியுள்ளது.

******

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

******